**தலைப்பு 263 - ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் அமைந்தனவாகும். அவ்வாறான செவ்வை பார்த்தல்களின் நோக்கெல்லை மற்றும் அளவு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்னும் வரையறைக்குட்பட இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 148,149,150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கிசையப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு ஆகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்து, நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ரூபா ரூபா 923.75 மில்லியனாகும். மீளாய்வாண்டு இறுதிய அதில் ரூபா 857.35 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 66.40 மில்லியன் அல்லது 7.19 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் வருமாறு.

**2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு, நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவவை | 695.65 | 690.01 | 5.64 | 0.81 |
| மூலதனம் | 228.10 | 167.34 | 60.76 | 26.64 |
| மொத்தம் | 923.75 | 857.35 | 66.40 | **7.19** |

**(ஆ) பிற அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தல்**

பல்வேறு பணிகளுக்காக ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய 27 அமைச்சுக்களாலும் 16 திணைக்களங்களாலும் மொத்தமாக ரூபா 2,442 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 2,399 பயன்படுத்தப்பட்டுமிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 43 மில்லியன் அல்லது 1.76 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது.

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்குரிய விடய இலக்கம் 26301 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதியும் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய வரம்பு | உள்ளவாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதிகூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 45.60 | 45.15 | 30.60 | 37.26 | 163.00 | 147.63 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் கீழான 06 வைப்புக் கணக்குகளது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 599.81 மில்லியன் ஆகும். விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0011/0598/000 | 300.00 |
| 6000/0000/00/0016/0043/000 | 162.47 |
| 6000/0000/00/0013/0075/000 | 85.14 |
| 6000/0000/00/0017/0014/000 | 50.48 |
| 6000/0000/00/0002/0092/000 | 0.89 |
| 6000/0000/00/0014/0007/000 | 0.83 |
| மொத்தம் | 599.81 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளில் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் வழங்குதல்

அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2016 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக் கூடிய கொடக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 29,783,610 ஆகும்.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களங்களாலும் வழங்கப்பட்ட நிதி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறுவர் விவகார அரசாங்க அமைச்சு வழங்கிய நிதியேற்பாடு

லுனுகம்வெஹெர மாவட்டச் செயலகத்தால் போஷாக்குப் பொதிகள் கொள்வனவு செய்யப்படும்போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகிச் செயற்பட்டுக் கூடிய கூறு விலைக்கு உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 370,134 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு வழங்கிய நிதியேற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் 15,000 கட்டியெழுப்பப்படும் நிகழ்ச்சித்திட்டத்தை மாவட்டத்தில் அமுல்படுத்துவது தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் புலனாகின.

- திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட வித்யார்த்த வித்தியாலத்தில் பாதுகாப்பு வலைவேலி போடப்படும் நிர்மாண வேலைக்குரிய மதிப்பீட்டைத் தயாரிக்கையில் அளவையும் அலகு கிரயத்தையும் கூடுதலாக மதிப்பீடு செய்தமையால் நிதியேற்பாட்டில் ரூபா 259,920 சேமிப்புக்குள்ளாகியது.

- 2015 மார்ச் 04 ஆந் திகதிய MHS/RD/VDP/2015 இலக்கமுடைய வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சினது செயலாளரின் கிராமங்களைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம் 2015 சம்பந்தமாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையாலும் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளாதும் குறித்த வேலையின்போது எஞ்சிய

ரூபா 259,920 செலவழிக்கப்பட்டு பிரதேச செயலகத்தின் உள்ளக வீதியொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

- சூரியவெவ பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட மஹபெலெஸ்ஸ சேவா பியசவுடன் கூடிய காணியில் சிறுவர் பூங்கா ஒன்றை நிர்மாணிக்கும் வேலைக்கு உரிய முதலாவது விலைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்ட செய்யாத 3 வேலைகளுக்கு ரூபா 65,904 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- 02 பிரதேச செயலகங்களினால் அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தைப் பெறாது குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய நிர்வாகச் செலவினத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியை உபயோகித்து அலுவலகப் பெயர்ப் பலகையைத் தயாரிப்பதற்காக ரூபா 112,392 செலவிட்டிருந்தது.

(ii) அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகத்தினால் அமுலாக்கப்பட்ட 03 கட்டிட நிர்மாணச் செயற்திட்டங்களுக்கும் ஒரு வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கும் உரிய விலைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த செய்யப்படாத வேலைகளுக்கு ரூபா 223,405 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(iii) அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகத்தினால் அமுலாக்கிய கலவெல்ல சேவா பியச நிர்மாண வேலைக்குரிய மதிப்பீட்டின் 14 ஆம் விடய இலக்கத்தின் கீழான வேலையை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 106,561 வழங்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த வேலை நியமத்திற்கு ஏற்ப பூர்த்தி செய்யப்படாததால் தரை முற்றாக வெடித்து இருந்தது.

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

---

பெலிஅத்த பிரதேச செயலகம் அமுலாக்கிய இரு நிர்மாண வேலைகளின் வேலை முடிவடைந்ததாகச் சான்றுறுதிப்படுத்தி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியன்று மொத்தம் ரூபா 1,140,373 காசோலை வரையப்பட்டு அது வழங்கப்படாதிருந்தது. 2016 சனவரி 12 ஆந் திகதியளவிலும் அந்நிர்மாண வேலைக்குரிய ரூபா 186,931 கூட்டுத்தொகையான வேலை நிறைவடையாதிருந்தது.

(ஈ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சு வழங்கிய நிதியேற்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் கூறினால் கொள்வனவு நடைமுறை அங்கீகரிக்கப்படாது ரூபா 79,300 பெறுமதியான 26 சுனாமி அனர்த்தப் பலகைகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ii) வலஸ்முல்ல பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட அனர்த்தங்களுக்கான பாதிக்கப்பட்ட மனைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நலன்பெறுநர்கள் மூவருக்கு வழங்கப்பட்ட முதல் தவணைப் பணம் குறித்த வேலை முடிவுறாது இருக்கையில் கிராம உத்தியோகத்தர் சமர்ப்பித்திருந்த போலியான அறிக்கையின் அடிப்படையில் ரூபா 150,000 கூட்டு மொத்தமாக இரண்டாவது தவணைப் பணம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) சமூக சேவைகள் அமைச்சு வழங்கிய நிதியேற்பாடு

---

வீரக்கெட்டிய பிரதேச செயலகம் 41 ஊனமுற்றோருக்கு 2015 திசெம்பரில் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 123,000 குறித்த நலன்பெறுநர்களுக்கு வழங்கப்படாது பணம் பெறப்பட்டதாக நலன்பெறுநரது கையொப்ப பதிவேட்டுடன் கொடுப்பனவு உறுதிச்சான்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் விவகார அமைச்சு மற்றும் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டத் திட்டமிடல் செயலகத்தால் ஜீப் வண்டி ஒன்று திருத்தப்படுவதற்காக ரூபா 708,250 செலவிடப்பட்டிருந்தது. அத்திருத்தமானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளுக்கினங்காதவாறு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்படி ஜீப் வண்டி புதுப்பிக்கப்படும் போது இயந்திரப் பொறியியலாளரால் பரிந்துரை செய்யப்பட்டிராத 16 ஆம் இலக்க விடய இலக்கத்தினது புதுப்பித்தலுக்காக ரூபா 151,950 வழங்கப்பட்டிருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

---

விடய இலக்கம் 26301 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைகளது கூட்டுத் தொகை ரூபா 4,407,694 ஆகும். அதில் 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 1,579,751 கூட்டுத்தொகையுடைய நிலுவை மீதிகள் 02 முதல் 20 ஆண்டுகள் வரையிலானவை ஆக இருந்து வந்த போதிலும் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

(ஆ) மாவட்டச் செயலகம் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண மீதிகளைக் காட்டும் தனித்தனியான கணக்கீட்டு மீதிப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2016 யூலை 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 187,408 கடன் மீதி 7 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட முடியாது செயற்பாடு அற்ற கடன் மீதியொன்றாக இருந்தது.

(ஈ) 1996 முதல் 2013 ஆம் ஆண்டு காலத்தின்போது சேவையை விட்டுச்சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 270,405 கூட்டுத் தொகையுடைய கடன் மீதிகள் இருந்த போதிலும், பிணையாளிகளிடமிருந்தேனும் அக்கடன் மீதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1995 முதல் 2011 வரையான காலப்பகுதியின்போது வேலை இடை நிறுத்தப்பட்டிருந்த 07 உத்தியோகத்தர்களிடமிருந்து 2016 யூலை 31 இல்

உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,121,938 கூட்டுத்தொகை 04 முதல் 20 ஆண்டுகளாகச் செயற்பாடற்ற கடன்மீதி 2 முதல் 19 ஆண்டுகளாகச் செயற்பாடற்ற கடன் மீதிகளாக இருந்த போதிலும், பிணையாளிகளிடமிருந்தேனும் அக்கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகமானது நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், 2015 முதல் அவ்வறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பினவரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்பத்தப்படுவதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்திக் காட்டப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்கள் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்த காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | கட்டிடங்கள் | 01 | சமர்ப்பிக்கப்படவில்லை | 4 ஆண்டுகளாக |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 04 | -மேற்படி- | 1 முதல் 10 ஆண்டுகள் வரை |
| (iii) | இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 10 | -மேற்படி- | 14 ஆண்டுகளுக்கு மேலாக |

**(ஆ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் 1 ஆண்டிற்கும் குறைவாக தீர்த்து வைக்கப்படாதிருக்கும் பொறுப்புக்கள் ரூபா 1,034,043 ஆகும்.

**3.6 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 137 - 139 மற்றும் 237 | 9,701,138 | வலஸ்முல்ல பிரதேச செயலாளர் அளவைப் பத்திரங்களையும் விலைப்பட்டியல்களையும் சமர்ப்பித்திராத 11 ஒப்பந்தங்களுக்கு 2015 திசெம்பரில் கொடுப்பனவு உறுதிச் சான்றிதழ்களைத் தயாரித்து, காசோலைகளையும் வரைந்து, அவற்றை 2016 சனவரி 11 வரை தன்னிடத்தே வைத்திருந்தார். |
| | 3,198,203 | திருப்திகரமாக வேலை முடிவுற்றது எனும் சான்றிதழைப் பெறாது அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகம் முடிவடையாத வேலைக்கு 2015 திசெம்பர் மாதத்தில் 18 காசோலைகளை வரைந்து 2016 பெப்ரவரி 02 ஆந் திகதியளவிலும் அவற்றை வைத்திருந்ததது. |
| | 993,150 | அங்குனகொலபெஸ்ஸ பிரதேச செயலகத்தினால் 2015 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி அடையாத கொடுக்கல் வாங்கல்களுக்கும் களஞ்சியத்தில் கிடைக்கப் பெற்றிராத பொருட்களுக்கும் 24 காசோலைகளை வரைந்து 2016 பெப்ரவரி 02 ஆந் திகதியளவிலும் அவற்றை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 215(1) மற்றும் 237 | 1,032,054 | கட்டுவன பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படாத பொருட்களுக்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதியன்று வழங்குனரது பெயருக்கு 09 காசோலைகள் வரையப்பட்டு 2016 பெப்ரவரீ 23 ஆந் திகதியளவிலும் அவை வைத்திருக்கப்பட்டன. |

(ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2001 செப்டம்பர் 24 ஆந் திகதிய 736,287 95 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | மாகாண சபைகளுக்கும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கும் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களது கடன் மீதிகளை காசோலைகள் மூலம் ஒரே தடவையில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) ஏனைய கடிதங்கள்

| | |
|---|---|
| 2010 ஒக்டோபர் 20 ஆந் திகதிய - 02/06/06(viii) GSHB இலக்கச் சுற்றாடல் அமைச்சின் செயலாளரது கடிதம் | லுனுகம்வெஹெர பிரதேச செயலகத்தால் வணிக ரீதியான நடவடிக்கைகளுக்கென 200 கியூப் மண்ணை அகன்று அதனைக் கொண்டு செல்வதற்கு தனியார் நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. |

### 3.7 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டத்தை அமுலாக்குதல்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடல் ஆகியவை தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது வெளியாகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

#### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

மாவட்டச் செயலகம் 2015 ஆம் ஆண்டின்போது அமுலாக்குவதற்கு எதிர்பார்த்த ரூபா 6,198,625 மதிப்பீட்டுக் கிரயத்துடனான 43 செயற்திட்டங்கள் கடும் மழை மற்றும் பிற காரணங்களால் ஆரம்பிக்கப்படவில்லை.

#### (ஆ) செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடல்

மாவட்டச் செயலகம் ரூபா 357,977 மதிப்பீட்டுக் கிரயமுடைய 03 செயற்திட்டங்களை 2015 ஆம் ஆண்டின்போது ஆரம்பித்திருந்தபோதும், பல்வேறு காரணங்களினால் அச்செயற்திட்டங்கள் முடிவடையாது கைவிடப்பட்டிருந்தன.

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

#### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து விலகுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) லுனுகம்வெஹெர பிரதேச செயலகம் 2015 ஆண்டின்போது ரூபா 3,458,587 கூட்டுத்தொகையுடைய 03 கொள்வனவுகளுக்கான தீர்மானங்களை மேற்கொள்கையில் கொள்வனவுக் குழு அங்கத்தவர் எவரும் அதில் பங்குபற்றியிருக்கவில்லை.

(ii) மேற்படி செயலகத்தால் 2014 ஆம் ஆண்டின்போது சந்தை விலை ஒப்பிட்டு அடிப்படையில் ரூபா 5,304,370 கூட்டுத்தொகையான 34

கொள்வனவுகளுக்கு அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.3 ஆம் வழிகாட்டலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் புறக்கணித்து பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கூறு விலைகளைக் கோரியிருக்கவில்லை.

(iii) குறித்த பிரதேச செயலகம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் கட்டிடப் பொருட்களை ரூபா 5,425,574 செலுத்திக் கொள்வனவு செய்கையில் அரசாங்கப் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலுக்கு இணங்காமல் கூறு விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு 5 நாள் காலஎல்லை மாத்திரமே வழங்கியிருந்தது.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்கப் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பிரதேச பொருட் கொள்வனவு குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை விஞ்சி செயற்பட்டு ஒகேவெல பிரதேச செயலகம் 2015 மார்ச் மாதம் தொடர்கம் ஜுன் மாதம் வரை போசாக்குப் பொதிகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,862,795 செலவழித்திருந்தது.

## 3.9 இழப்புகளும் நட்டங்களும்

1987 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது மாவட்டச் செயலகத்திலும் 12 பிரதேச செயலகங்களிலும் 35 சம்பவங்களால் ஏற்பட்டிருந்த இழப்புகளும் நட்டங்களும் ரூபா 19,451,377 கூட்டுத்தொகை ஆகும். எனினும், அது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் வருமாறு.

(அ) வறட்சியினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு பிரதேச செயலகங்கள் மூலம் நீரை விநியோகிக்கும் செயற்திட்டத்தின் கீழ் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 7,012 இருபது லீட்டர் நீர்க் கொள்கலன்கள் காணாமல் போயிருந்தன.

(ஆ) Oxfam Sri Lankan பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 1,146,620 பெறுமதியான 218 வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கை உபகரணங்கள் முறையான பாதுகாப்பின்றி வெளியே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 45,425 பெறுமதியான உபகரணங்கள் காணாமல் போயிருந்தன.

(இ) சூரியவெவல பிரதேச செயலகத்தால் மக்கள் பிரதிநிதிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014 இன் கீழ் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி அன்று கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 462,000 பெறுமதியான மின்சார மோட்டாருடன் கூடிய 20 சிங்கர் சாதாரண தையல் இயந்திரங்கள் 2016 யூன் மாதமளவிலும் நலன் பெறுநர்களுக்கு விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

(ஈ) திஸ்ஸமஹாராம பிரதேச செயலகம் அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தைப் பெறாது பிரதேச செயலலாளரின் அங்கீகாரத்துடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிர்வாகச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூபா 96,750 ஐ உத்தியோகத்தர்களது ஒன்றுகூடலுக்கென பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு வழங்கியிருந்தது.

(உ) திஸ்ஸமஹாராம பிரதேச செயலகம் மக்கள் பிரதிநிதிகளின் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்த பொருட்களில் ரூபா 678,555 பெறுமதியான பொருட்கள் 2015 நவெம்பர் 26 ஆந் திகதியளவிலும் நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

நான்கு பிரதேச செயலகங்களால் பதிவு செய்யப்பட்ட 610 காணி வழங்கும் பத்திரங்கள் மற்றும் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிராத 337 காணி வழங்கும் பத்திரங்கள் என்பன அவற்றிற்குரியவர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 01 முதல் 32 ஆண்டுகளாக இருந்தன.

**3.12 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 40 | 07 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 13 | 22 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,052 | 1,007 | 92 | 47 |
| (iv) | ஆரம்ப நிலை | 116 | 115 | 07 | 06 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 1,249 | 1,177 | 128 | 56 |

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் முடிவளவில் 03 மட்டத்தில் 54 ஊழியர்கள் மேலதிகமாக இருந்தபோதிலும், அப்பதவிகளை முறைப்படி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் எண்ணிக்கைத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிராத 02 பதவிகளில் இரண்டு மேலதிக ஊழியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.